DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 227/2021**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | |
|---|---|---|---|
| Name | : பழனி | Caste | : |
| Father Name | : ராமன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **17.07.2025.**

**PW - 6**

**(**எதிரி ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், மருங்காபுரி தாலுக்கா, பிடாரிபட்டியில் குடியிருக்கிறேன். சாட்சி பழனிசாமியை தெரியும். நான் விவசாயம் செய்கிறேன். 16.03.2020 அன்று மாலை பழனிசாமி என்பவரை எதிரி சொக்கலிங்கம் வெட்டிவிட்டதாக தகவல் கேள்விபட்டு அங்கு போனோம். துவரங்குறிச்சி போலிசார் இரவு 08.00 அல்லது 08.30 மணியளவில் அங்கு வந்தார்கள். சம்பவ இடத்தில் ஒரு வரைபடம் வரைந்தார்கள். வரைந்து எழுதினார்கள். சாட்சி கையொப்பம் போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த பார்வை மகசர் அதசாஆ.2 ஆகும். சம்பவ இடத்தில் இரத்தம் படிந்த மண், இரத்தம்படியாத மண், அரைக்கை சட்டை, ஊதா கைலி ஆகியவற்றையும் போலிசார் மகசரில் கைப்பற்றினார்கள். அவை முறையே **அதசாபொ.2 முதல் அதசாபொ.5** ஆகும். அந்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம்

என்னுடையதுதான். அந்த கைப்பற்றுதல் மகசர் அதசாஆ.3 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள். மேற்படி விசயங்கள் நடந்தது பிடாரிபட்டியில் உள்ள ஆண்டிசாமியின் வீட்டிற்கு முன்பாகும்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

எங்கள் ஊரிலிருந்து பிடாரிபட்டி ஒன்றரை கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. ஆண்டிசாமியின் வீட்டிற்கு எதிர்புறம் நிறைய வீடுகள் இல்லை. ஒன்று அல்லது இரண்டு வீடுகள் தான் உள்ளது. பழனிசாமி, தங்கமுத்து ஆகியோரின் வீடுகள் உள்ளன. அது குடியிருக்கும் வீடுதான். தகவல் அறிந்து 08.00 மணிக்கு நானாக பீரங்கிமேட்டிற்கு சென்றேன். நான் ஐந்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு கையொப்பம் மட்டும் போட தெரியும். படிக்க தெரியாது. பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் என்ன எழுதியிருக்கிறது என்று தெரியாது. கையொப்பம் மட்டும் போட்டேன். அதை யார் எழுதியது என்று எனக்கு தெரியாது. அதில் உள்ள அடித்தல், திருத்தல்களும் எனக்கு தெரியாது. அந்த இடத்தில் உள்ள வீடுகள் பாழடைந்து குடியிருக்க இயலாத நிலையில்தான் உள்ளது என்றால் சரியல்ல. ஆண்டிசாமி வீட்டில் அவர் தான் குடியிருக்கிறார். அது குடியிருக்கும் நிலையில்தான் உள்ளது. நான் முதல்விசாரணையில் சொல்லியதுபோல் என் முன்பாக போலிசார் மகசர் மற்றும் வரைபடம் தயாரிக்கவில்லை என்றும், அதசாபொ.2 முதல் 5 தடயங்களை என் முன்பாக போலிசார் அன்றைய தினம் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. தற்போது போலிசார் சொல்லிக் கொடுத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசா.1 எனக்கு 50 ஆண்டுகளாக பழக்கமானவர்.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.